# சட்டத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2022-2023

# மானியக் கோரிக்கை எண். 33

# சட்டத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு - 2022-2023

## மானியக் கோரிக்கை எண் 33


| வரிசை எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-6 |
| 2. | சட்டக் கல்வி | 7-21 |
| 3. | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் | 21-29 |
| 4. | தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் | 29-34 |
| 5. | மாநில சட்ட ஆணையம் | 35-38 |
| 6. | மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம் | 38-40 |
| 7. | சான்றுறுதி அலுவலர்கள் | 41 |
| 8. | நீடித்த வளர்ச்சி இலக்கு | 41-44 |

# சட்டத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு– 2022–2023

# மானியக் கோரிக்கை எண்.33

## முன்னுரை

இந்திய அரசமைப்புச் சட்டம் என்பது நாட்டின் மிக உயர்ந்த சட்டமாகும்; அதன் வகைமுறைகளை மீறுகிற வகையில் அமையும் சட்டம் எதனையும் செயற்படுத்த இயலாது. சட்டம் என்பது மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாகும். மேலும், சமுதாயத்தின் நலனை மேம்படுத்துவதும், பாதுகாப்பதும் அதன் நோக்கமாகும். திருவள்ளுவர் அவர்கள் சட்டங்கள் யாவும் மனிதநேய அடிப்படையில் நெகிழ்வுத் தன்மை உடையனவாக அமைதல் வேண்டும் என பின்வரும் குறள் மூலம் எடுத்துரைக்கிறார்:–

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்".

– குறள், 562.

குற்றங்கள் நிகழாமல் இருக்க, ஆட்சியாளர்கள் கண்டிக்கும் போது கடுமை காட்டி, தண்டிக்கும் போது மென்மை காட்ட வேண்டும் என்று மேற்காணும் குறள் வலியுறுத்துகிறது.

மக்கள் நல அரசு மற்றும் மக்கள் நல சமுதாயம் ஆகியவற்றில் மனிதனின் ஒவ்வொரு அலுவலிலும் சட்டமானது மிக முக்கியமானதொரு பங்கினை ஆற்றுகிறது. மேலும், சமூக–பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு சட்டமானது முக்கியமானதொரு கருவியாகப் பயன்படுகிறது. இன்றைய தினம் சட்டமானது சமூகக் கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாக மட்டுமே கருதப்படாமல் சமுதாய மாற்றத்திற்கான கருவியாகவும் கருதப்படுகிறது.

அடிப்படை உரிமைகள், அரசின் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் ஆகியன அனைத்தும் அரசமைப்புத் திட்டத்தின் பகுதிகளாக இருப்பதுடன்



சட்டத்தின் ஆட்சி என்பதன் அடிப்படையில் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் உள்ள சமூக முறையமைவினை அமைப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றன. மக்களாட்சி சமுதாயத்தின் வாழ்வில் சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சமத்துவம் பேணப்பட வேண்டும். மக்களின் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டமானது அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்துவதாகவும் குடிமக்களுக்கு சட்டமுறையிலான பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

சட்டம் என்பது தற்போதைய நடைமுறைக்கு ஏற்ற சட்டமாக இருத்தல் வேண்டும். மேலும், சட்டமானது அதனை இயற்றும் சட்டமன்றத்தின் சட்டமியற்று அதிகார வரம்பிற்குள் அமைவதாக இருப்பது மட்டுமின்றி அது அடிப்படை உரிமைகள் ஏதொன்றுக்கும் முரணாக இல்லாத வகையிலும் இருத்தல் வேண்டும்.

சட்டமானது, சட்டத்தை உருவாக்குவதில் உள்ள மரபு வழக்காறுகளைப் பின்பற்றுதல் வேண்டும். மேலும், அது கட்டுப்படுத்துகிற நடத்தை விதியாகவும் இருத்தல் வேண்டும்.

சட்டமானது ஒரு சீர்மிகு நாகரீகத்தின் உருவாக்கத்தை நோக்கிய சிறந்த வளர்ச்சிக்காக, சமூகத்தை மாற்றக் கூடிய ஒரு கருவியாக மாறி வருகிறது.

இந்த அரசின் சட்டத்துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளை கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத்துறை, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்ட வடிவமளித்து சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது.



சட்டமன்றப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் மற்றும்/அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில் சட்டத்துறையின் பணி தொடர்கிறது. சட்டமன்றப் பேரவை ஒத்தி வைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213–ஆவது உறுப்பின் படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத்துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன் வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதை பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத்துறையின் முக்கியப் பணியானது, சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தில் இயங்கும் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக

இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்டவகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத்துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளில், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத்துறையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிருவாகப் பணிகளையும் சட்டத்துறை செய்து வருகிறது:–

1. சட்டக்கல்வி.
2. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்.
3. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.
4. மாநில சட்ட ஆணையம்.
5. மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்.
6. சான்றுறுதி அலுவலர்கள்.



**சட்டக் கல்வி**

சட்டக் கல்வித் துறையானது, தமிழ்நாட்டில், 1953–ஆம் ஆண்டு சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை உருவாக்கப்பட்டதில் இருந்து, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய, இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மேலும், 1979–80–ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1996–97–ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர், 2006–இல் அறிவிக்கப்பட்டது. மேலும், 2008–2009–ஆம் கல்வியாண்டில், வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2017–2018–ஆம் கல்வியாண்டில் விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

நீதியரசர் திரு.ப.சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து, செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள வளாகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம்,



புதுப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள சட்டக்கல்லூரி வளாகத்தில் 5 ஆண்டு சட்டப்படிப்பும், திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூரில் கட்டப்பட்டுள்ள சட்டக்கல்லூரி வளாகத்தில் 3 ஆண்டு சட்டப்படிப்பு மற்றும் எல்எல்.எம் படிப்புகளும், 2018–2019–ஆம் ஆண்டு முதல் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2019–2020–ஆம் கல்வியாண்டில் சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்பில் தலா 80 மாணவர்களுடன் 2022–2023–ஆம் கல்வியாண்டு முதல் ஒரு அரசு சட்டக் கல்லூரியினை தொடங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது, இம்மாநிலத்தில் பதினான்கு அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

2021–2022– ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை 13526. இவற்றில், கல்லூரி

வாரியாக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன:–

**அட்டவணை**

| வ. எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர். (மூன்றாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 1123 |
| 2. | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுப்பாக்கம். (ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 1245 |
| 3. | அரசு சட்டக் கல்லூரி, மதுரை. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1478 |



| வ. எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1480 |
| 5. | அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1480 |
| 6. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1440 |
| 7. | அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1080 |
| 8. | அரசு சட்டக் கல்லூரி, வேலூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 680 |

| வ. எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 9. | அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 720 |
| 10. | அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 680 |
| 11. | அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 680 |
| 12. | அரசு சட்டக் கல்லூரி, சேலம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்) | 480 |
| 13. | அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்) | 480 |



| வ. எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 14. | அரசு சட்டக் கல்லூரி, தேனி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்) | 480 |
| **மொத்தம்** | | 13526 |

புதிதாக உருவாக்கப்பட்ட இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகள் தவிர்த்து, ஏனைய அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம், சேலம் மற்றும் தேனி அரசு சட்டக் கல்லூரிகளுக்கான சொந்த கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிக்கென சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.76.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. தேனி அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன்

கூடிய சொந்தக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.89.01 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.96.54 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய சொந்த கட்டடம் கட்டுவதற்காக ரூ.92.31 கோடிக்கு நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கென ரூ.10.89 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



பெரும்பாலான அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் விடுதி வசதிகள் உள்ளன. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூரிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியர் விடுதி மட்டும் உள்ளது. மேற்சொன்ன கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கென உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளுக்கு 186 உதவிப் பேராசிரியர்களை தேர்வு செய்திட ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டு 109 உதவிப் பேராசிரியர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் 2019, 2020 மற்றும் 2021–ஆம் ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

மீதமுள்ள பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு சட்டக் கல்லூரிகளில் பணியாற்றி வந்த பத்து இணைப் பேராசிரியர்களுக்கு 2020–2021 மற்றும் 2021–2022–ஆம் கல்வியாண்டுகளில் முதல்வர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டு, அரசு சட்டக் கல்லூரிகளில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் சட்ட முதுநிலைப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை இணைய வழியில் (Online) நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது 11 அரசு சட்டக் கல்லூரிகளில் 40 மாணாக்கர் எண்ணிக்கையுடன் கூடிய பாடப்பிரிவுகளாக பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் முதுநிலை சட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.



**<u>அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் முதுநிலை சட்டப் படிப்புகள் (2021–2022)</u>**

| வ. எண் | கல்லூரியின் பெயர் | எல்எல்.எம்., பாடப்பிரிவு |
|---|---|---|
| 1. | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூர். | (1) வணிகச் சட்டம்.<br>(2) குற்றவியல் சட்டம் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம்.<br>(3) சொத்துரிமைச் சட்டம்.<br>(4) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச்சட்டம். |
| 2. | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம். | சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் காலநிலை மாற்றச் சட்டங்கள். |
| 3. | அரசு சட்டக் கல்லூரி, மதுரை. | (1) சொத்துரிமைச் சட்டம்.<br>(2) சர்வதேச சட்டம் மற்றும் நீதி. |
| 4. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. | (1) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.<br>(2) அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்கள். |
| 5. | அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர். | (1) வணிகச் சட்டம்.<br>(2) வரிச் சட்டங்கள். |

| வ. எண் | கல்லூரியின் பெயர் | எல்எல்.எம்., பாடப்பிரிவு |
|---|---|---|
| 6. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. | அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைகள். |
| 7. | அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. | குற்றவியல் சட்டம் மற்றும் இணைய குற்றம். |
| 8. | அரசு சட்டக் கல்லூரி, வேலூர். | அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம். |
| 9. | அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம். | (1) தகவல் தொழில் நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு சட்டங்கள்.<br>(2) குடும்பச் சட்டங்கள். |
| 10. | அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி. | பெரு நிறுவன நிருவாகச் சட்டங்கள் மற்றும் நிதி. |
| 11. | அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம். | அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம். |

அரசு சட்டக் கல்லூரிகளில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

சர்வதேச அளவிலான மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் 2021–2022–ஆம் கல்வியாண்டு முதல்



கலந்து கொள்ள, மாணவர்களை தெரிவு செய்திட மொத்தமுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளிலும் மாதிரி நீதிமன்றப் போட்டிகள் நடத்துவதற்கென ஆண்டு தோறும் ரூ.70 இலட்சம் ஒப்பளிப்பு செய்திட நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலுள்ள 7 அரசு சட்டக் கல்லூரிகளிலும் தமிழ் வழியில் சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ் மொழி வாயிலாக சட்டப்படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.400/– வீதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

14 அரசு சட்டக் கல்லூரி நூலகங்களில் மாணவர்கள் பயன்பாட்டிற்கென சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்டத் தரவுதளங்கள் ஆகியவைகளை

கொள்முதல் செய்யும் பொருட்டு, ரூ.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி வளாகங்களில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் (Wifi–Zone) நிறுவிடும் பொருட்டு, ரூ.30 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப்பேராசிரியர்களுக்கு, ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி நடத்திட ரூ.14 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சட்ட மாநாடுகள் நடத்திட ஆண்டுதோறும் ரூ.28 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது மென்திறன்களை மேம்படுத்த தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மூலம்



ஆங்கிலத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவுவதற்கு ரூ. 28 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக்கல்லூரிகளில் மாணவர்களின் நலனுக்காக புத்தக வங்கித் திட்டம் டங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்**

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக, சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில் வெற்றி பெற்று தனித்துவம் பெறுவதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மாநிலச் சட்டத்தின் மூலம்

தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயற்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தற்போது பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில் தரமணி இருப்புப்பாதை நிலையத்திற்கு மிக அருகில் 15 ஏக்கர் நிலத்தில், ரூ.61.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழக விரிவாக்கப் பணிகளுக்காக கூடுதலாக 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்படும் சீர்மிகு சட்டப் பள்ளியில் இளநிலை சட்டப் படிப்பு மாணவர்களுக்கென ரூ.13 கோடியில் புதிய கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.



தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சட்டக்கல்வி பயிற்றுவிக்கும் பணியை, சீர்மிகு சட்டப்பள்ளி வாயிலாக தொடங்கி, மூன்றாண்டு எல்எல்.பி (ஹானர்ஸ்) சட்டப்படிப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பி.ஏ.,எல்எல்.பி (ஹானர்ஸ்), பி.காம்.,எல்எல்.பி (ஹானர்ஸ்), பி.பி.ஏ.,எல்எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் பி.சி.ஏ.,எல்எல்.பி (ஹானர்ஸ்) ஆகிய இளநிலை சட்டப்படிப்புகளில் மொத்தம் 3479 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேலும், இப்பல்கலைக்கழகம் முதுநிலை சட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளையும் பயிற்றுவித்து வருகிறது. "கடல்சார் சட்டம்" என்ற புதிய பாடப்பிரிவு முதுநிலை சட்டப் படிப்பில் 2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் சீர்மிகு சட்டப்பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் சீர்மிகு சட்டப்பள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் நடப்புச் செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக தொகுப்பு நல்கை நிதி ரூ.5.43 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியில் செவியுணர் காணொளி ஊடக மையம் அமைத்திட ரூ.46.58 இலட்சத்திற்கு நிருவாக அனுமதியும் மற்றும் பெருங்குடி வளாகத்தில் சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையம் நிறுவிட ரூ.1.67 கோடிக்கு நிருவாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து வகையிலும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம் அதன், சீர்மிகு சட்டப்பள்ளி மூலம் இதுவரை 92 ஆராய்ச்சி மாணவர்களுக்கு சட்ட



முனைவர் பட்டத்தினை வழங்கியுள்ளது. தற்போது 27 மாணவர்கள் முழுநேர அடிப்படையிலும், 106 மாணவர்கள் பகுதிநேர அடிப்படையிலும் முனைவர் ஆராய்ச்சி படிப்பினை இப்பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

சீர்மிகு சட்டப்பள்ளியில் இளநிலை சட்டப் படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைப் பிரிவு (NCC) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் "இணையவெளி மற்றும் சட்டம் மற்றும் நீதி" (Cyber Space and Law and Justice) என்ற புதிய பாடப்பிரிவில் முதுநிலைச் சட்டப் படிப்பு (எல்எல்.எம்) ரூபாய் 1.18 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 15 இலட்சம் செலவில் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஏற்படுத்துவதற்காக, மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புடன் கூடிய சட்ட அறிவு செயல் முறை மையம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் இயங்கி வருகிறது. குற்றவியல் சட்டப்பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம், தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகம் கீழ்க்காணும் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும், நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் ஆய்வு செய்வதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது:–



(1) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், அவுரங்காபாத்;

(2) தி சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிட்டெட், மும்பை;

(3) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், மும்பை;

(4) டாடா இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சைன்சஸ், மும்பை;

(5) ஏ.ஐ.ஆர் லாவா அகாடமி & ரிசர்ச் சென்டர், நாக்பூர் (ஏ.எல்.ஏ.ஆர்.சி);

(6) டிரான்ஸ்கிரிப்ட்ஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க், தரமணி, சென்னை;

(7) கன்சோர்டியம் பார் எஜீகேசனல் கம்யூனிகேசன், புது டெல்லி;

(8) இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செகரட்டரீஸ் ஆஃப் இந்தியா (ஐ.சி.எஸ்.ஐ)

(9) ஸ்போக்கன் டுடோரியல்ஸ், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, மும்பை.

(10) சைல்டு அண்டு அடோலசண்ட் பவுன்டேசன் ஆஃப் இந்தியா (சிஏஎப்ஐ) மற்றும் இன்ஸ்டிடியூட் ஆப் சைல்டு டெவலப்மெண்ட் எஜீகேசன் ரிசர்ச் அண்டு டெக்னாலஜி (ஐசிடிஈஆர்ட்டி) ; மற்றும்

(11) குஜராத் தேசிய சட்டப் பல்கலைக்கழகம், காந்தி நகர், குஜராத்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பெருங்குடி வளாகத்தில் "அனைத்திந்திய செய்தியாளர் (AIR) சட்டக்கல்வி உதவித் தொகுதி திட்டம்" தொடங்கப்பட்டுள்ளது. சட்ட மாணவர்களுக்கு சிறந்த சட்டக் கல்விப் பயிற்சியை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இப்பல்கலைக்கழகம் மற்றும் இப்பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்றுள்ள சட்டக் கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் தங்களது தொழில் தரத்தில் மேன்மை பெற, மாற்றுப் பூசல் தீர்வுமுறையை மேம்படுத்த, சட்டம் சார்ந்த பயிற்சியளித்தல் மற்றும் பிற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

அரசு சட்டக் கல்லூரிகள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளி மற்றும் தனியார் சுயநிதி சட்டக் கல்லூரிகளின் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகள், கலந்தாய்வு உட்பட அனைத்தும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்



பல்கலைக் கழகத்தால், இணைய வழியாக, http://www.tndalu.ac.in எனும் வலைதளம் மூலம் 2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் நடைபெற்று வருகிறது.

தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் (NAAC) அங்கீகாரத்தினை, அதிகபட்ச மதிப்பெண்களுடன் பெறுவதற்கு இப்பல்கலைக் கழகம் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

**தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி**

தமிழ்நாட்டில், தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக் கல்வி வழங்கும் பொருட்டு, 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியை மாநிலச் சட்டம் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் ரூ.79.22 கோடி மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, 2018–ஆம் ஆண்டு

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் உலகளாவிய காட்சியில் ஏற்பட்டு வரும் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப, சட்டம் பற்றிய அறிவு மற்றும் கற்றல், சட்ட செயல்முறைகள், வாதிடுதல் (வக்காலத்து) மற்றும் நீதி நிருவாகத் திறன் ஆகியவற்றை பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 138 இடங்களில் ஐந்தாண்டு பி.ஏ.,எல்எல்.பி (ஹானர்ஸ்), ஐந்தாண்டு பி.காம்., எல்எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் எல்.எல்.எம் ஆகிய படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர்கள் சேர்க்கையானது பொது சட்டப்படிப்பு நுழைவுத் தேர்வு (Common Law Admission Test – CLAT) மூலம் நடைபெறுகிறது.



2021–2022–ஆம் கல்வியாண்டில் மேற்சொன்ன சட்டப்படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :–

| வ. எண். | படிப்பு | சேர்க்கப்பட்ட மாணவர்களின்எண்ணிக்கை | |
|---|---|---|---|
| (1) | பி.ஏ., எல்எல்.பி (ஹானர்ஸ்) | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 29 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 26 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 03 |
| | | **மொத்தம்** | **58** |
| 2. | பி.காம்., எல்எல்.பி (ஹானர்ஸ்) | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 28 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 29 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 02 |
| | | **மொத்தம்** | **59** |
| 3. | எல்எல்.எம் | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 08 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 09 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 00 |
| | | **மொத்தம்** | **17** |
| **மாணவர்களின் மொத்த எண்ணிக்கை** | | | **134** |

இதுவரையில் இப்பல்கலைக் கழகத்தில், தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் மட்டுமே தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்பட்டு வந்தன. தற்போது, 2022–2023–ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இடஒதுக்கீட்டுக் கொள்கையை "அகில இந்தியப் பிரிவு" மாணவர் சேர்க்கையிலும் தமிழ் நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் (69%) பின்பற்றி இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50%, பட்டியலினத்தவருக்கு 18% மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு 1% இடங்களை ஒதுக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் சட்ட வரலாற்று அருங்காட்சியகத்தினை விரிவாக்கம் செய்திடும் பொருட்டு, தாமிரப் பட்டயங்கள் மற்றும் மாதிரிகள் (Copper reliefs and Models) வாங்குதல் மற்றும் ஆவணங்களை எண்மப்படுத்துதல் (Digitalization), அதனைப் பதிவு செய்தல் (Registration), காப்பீடு



செய்தல் (Insurance) அவற்றினைப் பாதுகாத்திடும் பணிகளுக்கென ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

மேலும், இப்பல்கலைக்கழகத்தில், மகளிர் நலச் சட்ட மையம், தென்னிந்திய சட்ட வரலாற்று மையம், சட்டம் மற்றும் வேளாண்மைக்கான மையம் (Centre for Law & Agriculture) மற்றும் முதலீடுகளுக்கான சட்டங்கள் மையம் (Centre for Investment Laws) ஆகியவற்றைப் புதியதாக நிறுவுவதற்கென ரூ.31.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது :–

(1) தேசிய சட்டப் பல்கலைக்கழகம், புது டெல்லி;

(2) இந்திய பல்கலைக்கழக தேசிய சட்டப் பள்ளி, பெங்களூரு;

(3) இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்திய கம்பெனி செகரட்டரீஸ் ஆஃப் இந்தியா, புது டெல்லி;

(4) இந்திய பன்னாட்டு மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பு, புது டெல்லி;

(5) தேசிய தொழில் நுட்பக் கழகம், திருச்சிராப்பள்ளி; மற்றும்

(6) வைகாடோ பல்கலைக்கழகம், நியூசிலாந்து.

மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகம் கீழ்க்காணும் கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ளது :–

(1) இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு, புது டெல்லி;

(2) இந்திய சமூக அறிவியல் கழகம், அலகாபாத்;

(3) சாஸ்திரி இந்தோ–கனடியன் அமைப்பு, புதுடெல்லி;

(4) ஆசிய சட்ட அமைப்பு, சிங்கப்பூர்; மற்றும்

(5) நூலக மேம்பாட்டு இணைவமைவு (DELNET), புது டெல்லி.



**மாநில சட்ட ஆணையம்**

மாநில சட்ட ஆணையம், உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில் 15.06.2017 அன்று மீள அமைக்கப்பட்டது. அவ்வாறு மீள அமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் பதவிக்காலம் அதன் தலைவர் பதவியேற்ற நாளிலிருந்து 3 ஆண்டுகள் ஆகும். மாநில சட்ட ஆணையத்தின் தலைவர், 19.06.2017 அன்று பதவியேற்றார். மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் பதவிக்காலமானது 18.06.2020 அன்றுடன் நிறைவுற்ற நிலையில் அரசானது மேற்சொன்ன சட்ட ஆணையத்தின் பதவிக்காலத்தினை 19.06.2020–லிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

மாநில சட்ட ஆணையத்தின் செயற்பணிகளானது ஆங்கிலேய ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு

இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு செய்வதாகும். மேலும், இவ்வாணையத்தால் ஆய்வு செய்யப்பட்ட அந்த சட்டங்கள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கனவாக உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் தனது கருத்தினை அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனைகளை அரசுக்கு வழங்கும்.

உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் சட்ட ஆணையம் ஆய்வு செய்து, அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அரசுக்கு அறிவுறுத்தும். மேலும்,–

(அ) தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கும்;

(ஆ) பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும்;



(இ) மாநிலங்களுக்கிடையேயான உறவுகளை மற்றும் மைய–மாநில உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும்;

(ஈ) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கும் மற்றும் பரிந்துரைகளைச் செய்யும்; மற்றும்

(உ) மாநில சட்டங்களுக்கு மட்டுமில்லாமல் இந்த மாநிலத்தில் செயல்பாட்டில் உள்ள மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கும்.

மேலும், 10.07.2017 அன்று நடைபெற்ற தலைமைச் செயலாளர்களின் தேசிய மாநாட்டில், சிறந்த நிருவாகத்திற்கு, நிதி ஆயோக் பரிந்துரையின் அடிப்படையில் இவ்வரசால், "தமிழ்நாட்டில் உள்ள சட்டங்களை பகுத்தல்" என்ற பொருளை மாநில சட்ட ஆணையத்திற்கு குறிப்பிட்டு, ஆணையத்தின் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறு 21.09.2017 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

அதற்கேற்ப, தற்போதைய ஆணையம் இதுவரை 48 அறிக்கைகளை (13–வது அறிக்கை முதல் 60–வது அறிக்கை வரை) அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கைகளில், ஆணையமானது,–

(i) 168 முதன்மைச் சட்டங்கள் மற்றும் 1400 திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்யவும்;

(ii) 13 சட்டங்களுக்கு திருத்தங்கள் செய்யவும்; மற்றும்

(iii) 3 சட்டங்களுக்கு பதிலாக புதிய சட்டங்களை இயற்றவும் பரிந்துரை செய்துள்ளது.

மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இதுவரை ஒரு முதன்மை சட்டத்தின் மீது திருத்தம் மற்றும் 408 சட்டங்களை மாநில அரசு நீக்கறவு செய்துள்ளது.

**மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்**

மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம், உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு.பொன்.கலையசரன் அவர்கள்



தலைமையில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் பதவிக்காலம் அதன் தலைவர் பொறுப்பேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் ஆகும். மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவர் 2018 டிசம்பர் திங்கள் 27–ஆம் நாள் பதவியேற்றுக் கொண்டார்.

மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் பணிகளானது:–

(i) தமிழில் சட்ட சொற்களஞ்சியம் (Law lexicon) தயாரித்து அச்சிடுவது;

(ii) மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தல்;

(iii) மத்திய அரசின் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் விதிகள் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழில் மொழிபெயர்த்தல்; மற்றும்

(iv) மாநில அரசால் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு அவ்வப்போது அளிக்கப்படும் பிற பணிகளைச் செய்தல்.

மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம், இதுவரை 55 மத்திய சட்டங்கள், அரசமைப்பின் நூற்றி மூன்றாம், நூற்றி நான்காம் மற்றும் நூற்றி ஐந்தாம் திருத்தச் சட்டங்கள் ஆகியவற்றை தமிழில் மொழிபெயர்த்துள்ளது. மேலும், இவ்வாணையமானது, சட்ட சொற்களஞ்சியம் (Law Lexicon) தயார் செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. ஆங்கில அகர வரிசை 'M' வரை 18,000–க்கும் மேற்பட்ட சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மேற்படி இவ்வாணையமானது இந்திய அரசியலமைப்பின் 2021 ஜனவரி 31–ஆம் தேதி வரையிலான திருத்தங்களை உள்ளடக்கிய திருத்தப்பட்ட (நான்காவது) மறுபதிப்பிணை இருமொழி (ஆங்கிலம் மற்றும் தமிழ் வடிவத்தில்) வெளியிட்டுள்ளது.



**சான்றுறுதி அலுவலர்கள்**

1952–ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையச்சட்டம் எண் 53/1952) மாற்று முறை ஆவணங்கள் தொடர்பான பரிவர்த்தனைகளை சான்றளிப்பதற்கும், மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 29.01.2022 அன்று உள்ளபடி தமிழக அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் மொத்த எண்ணிக்கை 2434 ஆகும்.

**நீடித்த வளர்ச்சி இலக்கு**

நீடித்த வளர்ச்சி என்பது எதிர்கால தலைமுறையினரின் சொந்த தேவைகளை மேற்கொள்வதற்கான திறன்களை பாதிக்காத வண்ணம் தற்போதுள்ள தலைமுறையினரின் தேவைகளை மேற்கொள்ளும் வளர்ச்சியாகும். 17 இலக்குகளையும், 169 குறிக்கோள்களையும் கொண்டுள்ள நீடித்த

வளர்ச்சி இலக்கானது ஐக்கிய நாடுகள் சபையில் முன்மொழியப்பட்டு 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்துறையின் கீழ் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களில் சட்டம் தொடர்பான கல்வியை வழங்குவதன் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்கு 16–இன் (அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்) செயலாக்கத்திற்கு உதவி செய்கிறது.

தமிழ்நாடு அரசு கல்வி ரீதியாக பின்தங்கிய மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்கள் உயர்கல்வி பயிலுவதற்கென குறிப்பாக உயர்கல்வியில் சட்டம் பயிலுவதற்கென முக்கியத்துவம் வழங்கி அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி வருகிறது. பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆர்வமுடைய மாணவர்கள் சட்டம் பயில ஏதுவாக புதியதாக அரசு சட்டக் கல்லூரிகளை பின்தங்கிய மாவட்டங்களில் நிறுவி நீடித்த நிலையான வளர்ச்சியினை இலக்காகக்



கொண்டு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, கல்வியில் பின்தங்கிய மாவட்டமான சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 160 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் புதிய அரசு சட்டக் கல்லூரி ஒன்று 2022–2023–ஆம் கல்வியாண்டில் தொடங்கிட இந்த அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சிவகங்கை மாவட்டத்தைச் சுற்றியுள்ள கல்வியில் பின்தங்கிய பிற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயன் பெறுவர்.

தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்து துறைகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கும் அமைப்பாக உள்ள இத்துறை, நீடித்த வளர்ச்சி இலக்கில், பிற துறைகளால் உருவாக்கப்படும் வளர்ச்சிக் கொள்கைகள் அடிப்படை உரிமைகள்

உள்ளிட்ட அரசியலமைப்பின் கூறுகளுக்கு இணங்கி உருவாக்கப்படுவதை உறுதிசெய்கிறது. மேலும், பிற துறைகள் தத்தம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதை உறுதிசெய்ய இத்துறை உதவுகிறது.

**எஸ். ரகுபதி,**
**சட்டத்துறை அமைச்சர்.**

*******